# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/6- 2016 නොවැම්බර් මස 28 වැනි සඳුදා - 2016.11.28

*1995/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : தொ/கா/1/எடு./அதி/108.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 4/3/6/2012/எச்டபிள்யூ/229.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தின், தொடங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், சபுகஹவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபரால் 2015.10.25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கா4527 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.0194 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் (02) இரண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

*1.* **துண்டு இல.** *01*
காணியின் பெயர் : கெடகெரெல்லகஹவத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: யூ. கே. டீ. ஜினசேன, சபுகஹவத்த, தொடங்கொட; விஸ்தீரணம் : 0.0033 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல.** *02*
காணியின் பெயர் : கெடகெரெல்லகஹவத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமைகோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: மஹேஷ் த சில்வா, சபுகஹவத்த, தொடங்கொட; விஸ்தீரணம் : 0.0161 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக துண்டு இல. 01 தொடக்கம் 02 வரையான காணிக்கு 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தொடங்கொட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

ஆர். எம். தர்ஷனா ரணசிங்க,
பிரதேச செயலாளர்,
தொடங்கொடை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொடங்கொடை,
*2016.08.02.*

*12 - 553*


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*